









We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## AUGUST

*We Are Here..!! To Guide You..!!*











# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஆகஸ்ட் - 30.08.2018

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- புத்தகங்கள்












Shine Academy™

## தமிழக நிகழ்வுகள்

- தமிழகத்தில் முதல் முறையாக, **ஹலிகேம்** எனப்படும் ஆளில்லா விமானம் **காட்டு யானைகளை** கண்காணிக்கும் பணி கோவை மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
  - காட்டு யானைக் கூட்டத்தின் நடமாட்டத்தை இந்த ஹலிகேம் டிரோன்கள் மூலம் தமிழக வனத்துறை கண்காணிக்கிறது.

## இந்திய நிகழ்வுகள்

- ஒடிஷாவின் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும் முன்மாதிரியான படைப்புகளை அங்கீகரிப்பதற்காக ‘மு ஹீரோ மு ஒடிஷா’**(I am hero, I am Odisha)** என்ற பிரச்சாரத்தை **ஒடிஷா** மாநில அரசு தொடங்கியுள்ளது.
  - இளைஞர்களிடையே உள்ள திறமையை அடையாளம் காண்பது மற்றும் அவர்களை சமூகத்தில் அங்கீகரிப்பதே இந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

- 21-ம் நூற்றாண்டின் சவால்களை கையாளுவதற்கு மாணவர்களுக்கு திறன் அளிப்பதற்காக சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில் முனைவோர் பிரிவு **(E-Cell – Entrepreneur-cell) ‘E-21’** என்ற பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.(E21 - campaign)
  - இதன் நோக்கம் சென்னையில் உள்ள, பல்வேறு பள்ளிகளில் பயிலும் 150 மாணவர்களின் **புதுமைப்புனைவு, படைப்புத்திறன்,** தொழில் முனைவுத் திறன் மற்றும் சவால்களை எதிர்த்து போராடுதல் ஆகியவற்றின் திறன்கள் மீதான கவனத்தை செலுத்துதல் ஆகும்.

- **FAME இந்தியா – II** - மின் வாகனங்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்காக சலுகை அளிக்கும் **FAME இந்தியா** – II திட்டத்தை செப்டம்பர் 7 அன்று, புது டெல்லியில் நடக்கும் உலக இயக்க மாநாடான ‘மூவ்’ மாநாட்டின் தொடக்க அமர்வின் போது இத்திட்டம் தொடங்கப்பட இருக்கிறது.
  - **FAME இந்தியா – I** திட்டமானது நாட்டில் சுற்றுச் சூழலுக்கு உகந்த வாகனங்களை ஊக்குவிப்பதற்காக, தேசிய மின்


We Shine Academy™

இயக்கத் திட்டத்தின் கீழ் **(NEMM – National Electric Mobility Mission) 2015**-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- FAME இந்தியா திட்டத்தின் விரிவாக்கம் - **Faster Adoption and Manufacturing of Hybrid Electric Vehicles – FAME**

## உலக நிகழ்வுகள்

- வங்கக்கடலை சுற்றி அமைந்துள்ள நாடுகளின் பொருளாதார ரீதியான ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில், பிம்ஸ்டெக்(BIMSTEC) அமைப்பின் 4வது உச்சி மாநாடு நோபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் ஆகஸ்ட் 30-31 தேதிகளில் நடைபெறுகிறது.
- **இம்மாநாட்டின் கருத்துரு:**
  - அமைதியை நோக்கிய, வளமான மற்றும் நிலையான வளர்ச்சி கொண்ட வங்காளப் பிராந்தியம் **(Towards a peaceful, Prosperous and sustainable bay of Bengal region)**
  - **குறிப்பு: BIMSTEC (Bay of Bengal Initiative for multi sectoral Technical and Economic Co-operation)** இவ்வமைப்பில் **இந்தியா, வங்கதேசம், மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான், நேபாளம்** ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.
  - இவ்வமைப்பு **1997ம் ஆண்டு** தொடங்கப்பட்டது. இதன் தலைமையகம் வங்காளதேசத்தின் டாக்கா நகரில் உள்ளது.

- **கீகோ – ரோபோ** பள்ளிகளில் குழந்தைகளுக்கு பாடம் நடத்துவதற்காக பல்வேறு தொழில்நுட்ப வசதியுடன் கூடிய சிறியவகை ரோபோவை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.
- **குறிப்பு**
  - சமீபத்தில் **உலக ரோபோ மாநாடு – 2018** சீனாவில் உள்ள பீஜிங்கில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- 18வது ஆசிய விளையாட்டு போட்டியில் **ஹெப்டத்லான்**



We Shine Academy TM

**Heptathlon** பிரிவில் **தங்கம் வென்ற** முதல் இந்திய வீராங்கனை எனும் பெருமையை **ஸ்வப்னா பர்மான்** Swapna Barman பெற்று புதிய வரலாற்று சாதனையை படைத்துள்ளார்.

- ○ சீன வீராங்கனை குயங்லிங் வெள்ளிப் பதக்கத்தையும், ஜப்பான் வீராங்கனை யமாசகி வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **கூகுள் கோ செயலி – பார்க்கும் மற்றும் வாசிக்கும்** திறனற்றவர்களுக்கும் இணையப் பக்கத்தை பயன்படுத்தும் விதமாக கூகுள் நிறுவனம் கூகுள் கோ என்ற செயலியில், இணையப் பக்கங்களை **28 மொழிகளில்** வாசிக்கும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

## புத்தகங்கள்

- இந்தியாவின் பழைமையான பண்பாடு மற்றும் தற்போதைய நிலைமைகளுக்கிடையேயான தொடர்பை விளக்கும் **'கலோனியல் சின்ட்ரோம் Colonial Syndrome'** என்ற புத்தகத்தை ஆந்திரப் பிரதேசம் விசாகப் பட்டினத்தைச் சேர்ந்த பேராசிரியர் **'ராமகிருஷ்ண ராவ்'** என்பவர் எழுதியுள்ளார்.
  - ○ இப்புத்தகம் குடியரசுத் துணைதலைவர் எம்.வெங்கையா நாயுடு வெளியிட்டுள்ளார்.



We Shine Academy™